# முகிலன் குறித்த வழக்கு: அறிக்கை தாக்கல் செய்ய சிபிசிஐடிக்கு உத்தரவு

Published 04-Mar-2019 19:32 IST

Mail Print A A



சென்னை: சுற்றுச்சூழல் பாதுகாப்பு இயக்க செயற்பாட்டாளர் முகிலன் மாயமானது தொடர்பான விசாரணை குறித்து மார்ச் 18 ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய சிபிசிஐடிக்கு சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது

தூத்துக்குடியில் ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராக நடந்த போராட்டத்தின்போது நடைபெற்ற துப்பாக்கி சூடு சம்பவத்தில் காவல் துறை உயர் அதிகாரிகளின் தொடர்பு இருப்பதாக வீடியோ ஆதாரங்களை சமீபத்தில் முகிலன் வெளியிட்டிருந்தார்.

பின்னர், பிப்ரவரி.16 ஆம் தேதி சென்னை- நாகர்கோவில் சிறப்பு ரயிலில் முகிலன் பயணித்துள்ளார். அதன் பின் அவரைக் காணவில்லை.

இதையடுத்து, முகிலனை கண்டுபிடித்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனித உரிமைகள் ஆர்வலர் ஹென்றி திபேன் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்திருந்தார்.

இதனிடையே இந்த வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்ட நிலையில், இன்று மீண்டும் நீதிபதிகள் சத்தியநாராயணன், நிர்மல்குமார் ஆகியோர் அடங்கிய அமர்வு முன்பு விசாரணைக்கு வந்தது.

அப்போது, முகிலன் மாயமானது தொடர்பாக இதுவரை 148 பேரிடம் விசாரணை நடத்தியுள்ளதாக சிபிசிஐடி தரப்பில் விளக்கமளிக்கப்பட்டது.

இதையடுத்து, இதுவரை நடத்தப்பட்ட விசாரணை தொடர்பாக மார்ச் 18 ஆம் தேதிக்குள் அறிக்கை தாக்கல் செய்ய சிபிசிஐடிக்கு நீதிபதிகள் உத்தரவிட்டனர்.